DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **C.C.No.85 /2022**

Preliminary Register

Sessions

Deposition of witness for Procecution
Defence

Name : செல்வம் (Pw.1)
Father/Husband Name : சவரிமுத்து
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 28th day April of 2023

( எதிரிகள் ஆஜர்.)

**முதல் விசாரணை:–**

1. நான் தற்போது கண்டுகொண்டான் மாணிக்கத்தில் குடியிருந்து வருகிறேன். நான் ஊராட்சி செயலாளராக இருந்து பணி ஓய்வு பெற்றுவிட்டேன். எதிரிகள் அனைவரும் என் ஊரைச் சார்ந்தவர்கள். கடந்த 04.10.2019 ம் தேதி மதியம் 1.30 மணியளவில் நானும் எனது மைத்துனன் இஸ்ரவேல், எனது மனைவி அம்பிகாவதி, மற்றும் குழந்தைகள் வீட்டில் இருந்தனர். அப்போது எதிரிகள் மரியசூசை, கோவில் பிள்ளை, அந்தோணி மரியாள் மற்றும் சேகர் ஆகியோர் உட்பட அருப்புக்கோட்டையிலிருந்து ஞானமுத்து, வேதமுத்து, சவரிமுத்து, ஆகியோர் உட்படி மதுரையிலிருந்து ஆரோக்கியம் ஆகியோர் கூட்டமாக என்வீட்டிற்கு வந்தார்கள். அவர்கள் ஆஜர் எதிரிகள் நான்கு பேர் ஆவார்கள். எதிரிகள் நான்கு பேரும் எனது வீட்டிற்கு பக்கத்தில் உள்ள புரோம்புக்கு இடத்தில் வீடு கட்ட வேண்டும் என்று கேட்டனர். நான் இது அரசு புரோம்புக்கு. இது நம்ம கண்மாயிலிருந்து என். முக்குளம் கண்மாயிக்கு தண்ணீர் செல்லும் கால்வாய் என்று நான் சொன்னேன். கால்வாய்க்கு மேல் மேற்கு பக்கம் ரோடு உள்ளது.

2. கால்வாய்க்கு கிழக்கே புரோம்புக்கு இடம் 42 இன்ஸ் அளவு உள்ளதால் அந்த இடத்தில் வீடு கட்ட வேண்டும் என்று சொன்னார்கள். நான் கட்ட முடியாது என்று சொன்னேன். வருவாய் அலுவலர்களை அணுகும் படி கூறினேன். அவர்கள் அனுமதித்தால் வீடு கட்டுங்கள் என்று சொன்னேன். நீ தாண்டா வீடு கட்ட விடாமா தகராறு பண்ணுற என்று சொல்லி என்னை எதிரிகள் தகராறு செய்து அடிக்க ஆரம்பித்துவிட்டார்கள். 2 ம் எதிரி கோவில் பிள்ளை, 1 ம் எதிரி மரியசூசை ஆகியோர் கம்பு வைத்து எனது தலையில் இடது பக்க நெற்றி பகுதியில் அடித்தனர். அடித்தவுடன் நான் கீழே விழுந்துவிட்டேன். மற்ற இரண்டு எதிரிகளும் என்னை பிடித்துக்கொண்டார்கள். 1 மற்றும் 2 வது எதிரிகள் என்னை அடித்தனர். அப்போது எனக்கு மயக்கம் வந்துவிட்டது. எதிரிகள் அனைவரும் வாயில் சொல்லமுடியாத தூஷன வார்த்தைகள் சுன்னி மயனே புண்டை மகனே தேவுடியா மகனே நீ இருக்க வரைக்கும் நான் வீடு கட்ட முடியாதுடா உன்னை கொன்றால் தான் வீடு கட்ட முடியும் என்று சொன்னார்கள். என்னுடன் இருந்த எனது மைத்துனர் இஸ்ரவேல் சண்டையை விலக்கிவிட்டார். நான் நரிக்குடி காவல் நிலையம் சென்றேன். நரிக்குடி காவல் நிலையத்திற்கு எனது மனைவி ஆட்டோவில் அழைத்து சென்றார். நான் புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படுவதுதான் அந்த புகார். (**அந்த புகார் மனு அ.த.சா.ஆ 1.ஆக குறியிடு செய்யப்படுகிறது**). அந்த புகார் மனுவை எனது மைத்துனர் இஸ்ரவேல் எழுதினார் . அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். பின்னர் திருச்சுழி அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கு ஒரு வாரம் சிகிச்சை பெற்றேன். போலிசார் என்னை வழக்கு சம்பந்தமாக விசாரித்தார்கள்.

எ.த.கு.வி :-

3. எதிரிகள் ஆஜர். எதிரிகள் வழக்கறிஞர் ஆஜர். ஆனால் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. எனவே குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.